**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 107/2022 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW. 6 |
| | Defence |
| | Court |
| Name | பரந்தாமன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 4th day of April 2025.

Signature of Witness

Name of the INterpreter: Tmt. Mohana, Gr.III, Bench Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 4th day of April 2025.

Signature of Interpreter

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஆவீன் பால் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறேன். நான் கதிர்பூர் தாபா ஓட்டலில் வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் முதல் எதிரி மாணிமாறனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அதுபோல் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்தும் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

கடந்த 16.07.2022 அன்று பகல் 12.30 மணியளவில் நானும் அறங்குப்பத்தை சேர்ந்த என்னுடைய நண்பர் பரந்தாமன் ஆகியோர் தமால் கிராம ஏரி கரை களங்கல் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது அங்கு 2 போலிசார் பிடித்து விசாரித்துக்கொண்டுயிருந்தார்கள் என்றும் நானும் பரந்தாமன் அங்கு சென்று பார்த்தபோது போலிசார் எங்களிடம் நாங்கள் பாலுசெட்டி காவலர்கள் என்று அந்த 2 நபர்களும் தாமல் கிராமத்தை சேர்ந்த மணிமாறன் மற்றும் துளசிராமன் என்றும் தெவரித்தார்கள் என்றும் இருவரும் காஞ்சிபுரத்தை சேர்ந்த பிரபல ரௌடி ஸ்ரீதரன் கூட்டாளி என்றும் அவர்கள் இருவரும் 16.07.2022 அன்று காலை 7 மணிக்கு கீழம்பி செவிலிமேட்டில் உள்ள பஞ்சாபி தாபாவில் டிபன் சாப்பிட்டுவிட்டு காசு கொடுக்காமல் காசு கொடுக்க கேட்ட முதலாளியை கத்தியை காட்டி மிரட்டி கல்லாவில் இருந்த பணத்தை கொள்ளையடித்துவிட்டு சென்றதாகவும் அந்த வழக்கு சம்பந்தமாக எதிரிகளை கைது செய்து அவர்கள் இருவரும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

அளிக்க இருப்பதாகவும் என்னையும் மற்றொரு சாட்சியான பரந்தாமன் என்பவரையும் போலிசார் அங்கேயே மணிமாறன் குற்றத்தை ஒப்புக்கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் கத்தியை காட்டி மிரட்டி பணம் கொள்ளையடித்ததை ஒப்புக்கொண்டார் என்றும் அந்த சம்பவத்தில் பயன்படுத்தி இரும்பு கத்தி ஒன்றையும் மற்றும் ரூபாய் 200 பணத்தையும் எடுத்து எதிரிகள் ஆஜர் படுத்தினார்கள் என்றும் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் பரந்தாமனும் சாட்சியாக கையெழுத்து போட்டோம் என்றும் அதேபோல் 2 வது எதிரியான துளசிராமன் என்பவரும் சம்பவத்தில் பயன்படுத்திய இரும்பு கத்தியை எடுத்து போலிசாரிடம் ஆஜர் படுத்தினார் என்றும் அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் பரந்தாமனும் கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.